**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 329-1-1-2013 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக தொடக்க மதிப்பீட்டு நிதி ஏற்பாடான ரூபா 1,800,000 பணத்தில் ரூபா 1,200,000 அல்லது 67 வசதவீதம் அளவிலான நிதி எற்பாடு குறைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் மீளாய்வாண்டில் தொடக்க மதிப்பீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்த 329-1-1-2106 ஆம் இலக்க மென்பொருள் அபிவிருத்தி செலவு விடயத்திற்கு நிதிப்பிரமாணத்தின் மூலம் மாற்றப்பட்டிருந்தது. | அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக 2022-04-26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தலினை கட்டுப்படுத்தியதன் காரணமாக 329-1-1-2103 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து மிகுதியான நிதி ஏற்பாடாகிய ரூபா 1,200,000 தொகை தேவைப்பாட்டின் அடிப்படையில் செலவுத் தலைப்பு இலக்கம் 329-1-1- | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரித்தல் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 2106 இன் கீழ் மென்பொருள் அபிவிருத்திக்காக மாற்றப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே செலவுத் தலைப்பு 329-1-1-2106 ஆம் இலக்க மென்பொருள் அபிவிருத்தியின் கீழ் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் நிதி ஏற்பாட்டு தேவைப்பாடு உருவாகியிருக்காததனால் அதற்குத் தேவையான நிதி ஏற்பாடு 329-1-1-2103 என்ற செலவு விடயத்திலிருந்து நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

## 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திறைசேரி பத்திரம் இலக்கம் SA 92 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 02 செலவு தலைப்புக்கள் தொடர்பாக பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 375,107 தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு iii இல் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அத்தவறு எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதனை கவனித்துப் பார்த்துக் கொள்வதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு தொடர்பான பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களின் பொறுப்புக்கள் கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| நிதிப்பிரமாணம் 880 | திணைக்களத்தில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான சட்டரீதியான பிரமாணங்களை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் உரிய நடவடிக்கையினை எடுப்பேன் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1. கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அமைச்சரவையினால் 2012 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிதி அமைச்சின் கீழ் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பொதுத்திறைசேரியின்/ நிதி அமைச்சின் அனைத்து திணைக்களங்களையும் | | |

| | | | |
|---|---|---|---|
| | தன்னியக்கப்படுத்துதல் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்ததுடன் பொதுத் திறைசேரியின் மற்றும் நிதி அமைச்சின் தகவல் தொழில்நட்ப முறைமையை திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் பொதுத்திறைசேரி/ நிதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையினை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | அரசாங்க ஊழியர்களுக்கு வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் சம்பளத்தை செலுத்துவதற்காக திறைசேரியின் திணைக்களங்களில் சம்பளங்களை செலுத்தும் முறைமையை விரிவுபடுத்தும் குறிக்கோளில் புதிய ஈ-சம்பள முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை திணைக்களத்தில் முறைமை நேரடியாக செயற்படும் நிலைக்கு மாறியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | E சம்பள முறைமை நேரடியாக செயற்படும் நிலைக்கு பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த முறைமை நேரடியாக செயற்படுவதற்கான பொறுப்பு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | முறைமையினை நேரடியாக செயற்படும் நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்யும் விண்ணப்ப பத்திரங்களை இணைய வழியினூடாக அனுப்பிவைக்கும் முறைமையில் புதிய அபிவிருத்தியினை மேற்கொண்டு முறைமையின் ஓட்டுமொத்த பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இறுதியில் முதல் கட்டமாக நிதி அமைச்சினுள் காணப்படுகின்ற சில திணைக்களங்களில் முறைமையினை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என கணக்காய்விற்கு தெரியப்படுத்தியிருந்தும் அது 2023 | முறைமையானது அமுல்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இனங்காணப்பட்ட புதிய தேவைப்பாட்டினை அபிவிருத்தி செய்து நாளதுவரையாக்குதல் எங்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் இன்னும் செய்யப்பட்டு வருகின்றது. | முறைமைக்குரிய ஏனைய மொடியூல்களையும் அபிவிருத்தி செய்து முறைமையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அது முறைப்படியாக அமுல்ப்படுத்தும் நிலையில் காணப்படவில்லை. | | |
| (இ) | நிதி அமைச்சின் போக்குவரத்து பிரிவின் தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட முறைமையின் அபிவிருத்தி செயற்பாடுகள் அமுல்ப்படுத்தும் நிலையில் காணப்பட்டிருந்தும் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அந்த முறைமை பயன்பாட்டில் இருக்கவில்லை. | போக்குவரத்து பிரிவிற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட தகவல் முறைமைக்காக எங்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து செயற்பாடுகளும் முடிவடைந்துள்ளதனால் மிகுதி நடவடிக்கைகளை செயற்படுத்துதலானது போக்குவரத்து பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | முறைமையினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகள் 57 ஆக இருந்ததுடன் அவற்றில் 10 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அந்த வெற்றிடமான பதவிகளுக்கு மத்தியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 03 பதவிகளும், மூன்றாம் மட்டத்திலுள்ள 01 பதவியும் இரண்டாம் மட்டத்திலுள்ள 05 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலுள்ள 01 பதவியும் இருந்தன. | கருத்துரைகள் தரப்படவில்லை. | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஈ- அரசாங்க சேவை (E-Governance) கருதுகோளினை அடைந்து கொள்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக இனங்காணப்பட்டிருந்தும் ஈ- சேவைகளை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான திறமைகள் மற்றும் வல்லமைகளைக் கொண்ட தொழில்நுட்ப பதவியணியினரின் தட்டுப்பாடு திணைக்களத்தின் ஒரு சவாலாக 2020 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அச்சவால்கள் வெற்றி கொள்ளப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய தகைமைகளுடனான உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |